

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து : துன்புறுவோருக்கு ஆறுதல்: துன்புறும் யாவரும் குறிப்பாக ஏழைகள், அகதிகள், ஒதுக்கப்பட்டோர் அனைவரும் நமது சமூகங்களில் வரவேற்கப்பட்டு ஆறுதல் அடைய வேண்டுமென்று**

**பிப்ரவரி மாத கரு : மனிதத்தன்மையில் கடவுளின் கொடையை வரவேற்றல்**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| பிப் 26 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்கால 8-ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ) | பொதுக்கால 8-ஆம் ஞாயிறு- புகுமுக தேர்வுக்கு அனுப்புதல் |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ) | சிறார்களுக்கான திருப்பலி @ பெர். மையம் |
| | காலை 11.00 | திருப்பலி (ம) | பொதுக்கால 8-ஆம் ஞாயிறு |
| | மாலை 5.30 | நவநாள்/ திருப்பலி (த) | கிறிஸ்து அரசர் சிற்றாலயம், புந்தோங் தீகா |
| பிப் 27 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| பிப் 28 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| மார்ச் 1 புதன் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | விபூதி புதன் |
| | மாலை 8.00 | திருப்பலி (த, ஆ) | விபூதி புதன் |
| மார்ச் 2 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | தவக்கால வாரநாள் |
| மார்ச் 3 வெள் | மாலை 7.30 | சிலுவைப்பாதை (ஆ,த)/திருப்பலி(ஆ) | தவக்கால வாரநாள் |
| மார்ச் 5 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | தவக்கால 1-ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | தவக்கால 1-ஆம் ஞாயிறு |
| | மாலை 6.00 | திருப்பலி (த) | புனித செபஸ்தியார் சிற்றாலயம், முனிசிபல் |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| பிப் 26 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | காலை 11.00 | பெர். மை 1-1&1-2 | உறுதிபூசுதல் பெற்றோர்கள் & ஆதரவாளர்கள் கூட்டம் |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| | மாலை 7.30 | புந்தோங் தீகா | கிறிஸ்து அரசர் சிற்றாலய குழு கூட்டம்- மேற்கு திசை தலைவர்கள் |
| பிப் 27 திங் | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| | மாலை 7.45 | பெர். மை 1-3 | நற்கருணை பணியாளர்கள் கூட்டம் |
| பிப் 28 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை செபம் |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | திருப்பலி மேற்பார்வையாளர் கூட்டம் |
| மார்ச் 2 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | புலூமா மகளிர் குழு கூட்டம் |
| மார்ச் 4 சனி | காலை 10.00 | பெர். மை 2-5 | சீடத்துவ நிகழ்வு |
| | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| மார்ச் 5 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| | மாலை 7.00 | ஆலயம் | பாடல்குழு (ஆ) |

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. ஆயரின் உத்தரவு: 1)** ஒவ்வொரு விசுவாச பயிற்சியாளர்கள் (மறைக்கல்வி ஆசிரியர்கள், RCIA ஏற்பாட்டாளர்கள், திருமுழுக்கு/ திருமண விளக்கவுரையாளர்) ஆகிய அனைவரும் பங்கு அளவில் அல்லது திருமண்டல அளவில் அல்லது மறைமாவட்ட அளவில் ஒரு வருடத்தில் ஒரு உருவாக்கத்திலாவது கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். **2)** ஒவ்வொரு பங்கும் மாதத்தில் ஒரு முறை வாரயிறுதி மலாய் மொழி திருப்பலி **பங்கு அளவில்** நடத்த கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**2. பங்கின் உத்தரவு: மறைக்கல்வி வகுப்புகள்**: புது நன்மை எடுத்த பிறகு அனைத்து குழந்தைகளும் பின்வரும் பணிக்குழுக்களில் ஏதேனும் ஒன்றை கண்டிப்பாக தேர்ந்தெடுக்க வேண்டும். அ) **பீடச்சிறுவர்கள்** (சிறுவர்கள்/ சிறுமியர்கள்) ஆ) **ஆங்கில பாடல்குழு** இ) **தமிழ் பாடல்குழு**. இது கட்டாயமானதாகும்.

**3. செப ஒன்றுகூடுதல் (தமிழ்):** எழுப்புதல் குழுவும், புலூமா தமிழ் பாடல்குழுவும் இணைந்து தமிழ் அருங்கொடை செபத்தை ஏற்பாடு செய்திருக்கின்றனர். நாள்: 9/3/17 (வியா)@ மாலை 8.00@ புலூமா தேவாலயம். அனைவரும் வரவேற்கப்படுகிறீர்கள்.

4. **குடும்ப செபம்:** 5 மார்ச் 2017 (ஞாயிறு) குடும்ப செபத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டது. நீங்கள் உங்களது குழந்தைகளை குடும்ப செபத்தில் இணைய ஆர்வம் காட்டுங்கள். இந்த நேரத்தின் போது பங்கில் எந்த செயல்பாடுகளும் நடக்காது.

**5. புலூமா புத்தக பணிக்குழு:** மாதத்தின் ஒவ்வொரு முதலாவது ஞாயிறும் புத்தக விற்பனை நடைபெறும். மார்ச் மாத புத்தக விற்பனை 5/3/17 காலை 9.00 மணி திருப்பலிக்கு பிறகு பங்கு மண்டப வெளிபுறத்தில் நடைபெறும்.

**6. இல்லம் திரும்புதல்:** தவக்கால சிந்தனை மலாய் மொழியில் 5/3/17 (ஞாயிறு) காலை 10.30~ 2.00 மணி @ பெர். மை 1-1 &1-2ல் நடைபெறும்.

**7. கெபியில் விளக்கு:** மின் கம்பி புதுப்பிக்கும் வேலை நடைப்பெற்றுகொண்டு இருப்பதால் கெபியில் ஒரு வாரம் விளக்கு இருக்காது.

8. **சோய்ஸ் தமிழ் பினாங்கு 26: நாள்**: 9~12 மார்ச் 2017 **நேரம்:** மாலை 7.00 (வியாழன்) ~ மாலை 5.00 (ஞாயிறு)
**இடம்:** புனித ஜஸ்டன் & இம்பர்ட், பிறை **தொடர்புக்கு:** ஏனி (016-9540417)

**9. தமிழ் மறைக்கல்வி வகுப்புகள்:** தமிழ் மறைக்கல்வி வகுப்பில் ஆள்சேர்ப்பு மிகவும் குறைவாக இருக்கின்றது. சில வகுப்பில் 3க்கும் குறைவான மாணவர்களே இருக்கின்றனர். தமிழ் மறைக்கல்வி வகுப்புகள் வேண்டுமென்று கேட்டீர்கள். ஆனால் அதை முக்கியமானதாக எடுத்துக்கொள்ளவில்லை. மார்ச் மாதம் முதலாவது வாரம் வரை உங்களுக்கு கால அவகாசம் தருகிறோம். இன்னும் அப்படியே இருந்தால் 5 மாணவர்களுக்கும் குறைவாக உள்ள வகுப்பை மூடிவிட்டு அவர்களை ஆங்கில மறைக்கல்வி வகுப்பிற்கு அனுப்புவோம்.

**10. உலகளவிலான மகளிர் தின கொண்டாட்டம்:** 12/3/17 (ஞா) காலை 10.00 ~ மதியம் 1.00 வரை புலூமாவில் நடைபெறும். பதிவு பாரங்களை பங்கு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது 26/2/17 ஞாயிறு திருப்பலிகளுக்கு பிறகு பங்கு மண்டபத்தில் பதிவுகளை செய்யலாம். தொடர்புக்கு: ஜெனட் (017-5798987)

**11. வேலைவாய்ப்பு:** மருத்துவ அனுபவம் உள்ள பராமரிப்பாளர்கள் (முழுநேர/ பகுதிநேர) ஈப்போ மற்றும் பொது பணியாளர், கம்போங் சீமி முதியோர் இல்லத்திற்கு உடனடியாக தேவைப்படுகின்றனர். தொடர்புக்கு: ஹெலன் லாய்/ எலிசியா யோங்(05-5473252/ 05-5452449)

**12. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (தமிழ்):** 11 மார்ச் 2017 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**13. 24 மார்ச் 2017 கிறிஸ்மா திருப்பலியையொட்டி நேரலை**: கோத்தா பாரு, கிளாந்தான், புனித ஜெபமாலை பாத்திமா அன்னை ஆலயத்தில் காலை 8.00க்கு நேரலை செய்யப்படும். பினாங்கு ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும் கொண்டாட்டத்தை இணையத்தில் http://www.youtube.com/user/liveonlinepenang வழி காணலாம்.

**14. பழைய செய்திதாள்கள்:** கிறிஸ்து அரசர் சிற்றாலய செயற்குழு, புதிய சிற்றாலயம் கட்டுவதற்காக நிதி திரட்ட பழைய செய்தித் தாள்களை சேகரித்து விற்க திட்டமிட்டுள்ளது. கொடுக்க விருப்பமுள்ளவர்கள் அவைகளை கொண்டு வந்து பங்கு மண்டபத்தில் கொடுக்கலாம்.

**15. ஆலயத்தினுள் அடிப்படை உடையணிதலும், நல்லொழுக்கமும்:** நீங்கள் திருப்பலிக்கு வரும்போது உடையணிவதில் பெருமை கொள்ளுங்கள். நீங்கள் ஆண்டவருக்கு மிகச்சிறந்தவற்றை வழங்க வேண்டும். குட்டையான கால் சட்டைகளோ, கையில்லாத பனியன்களோ கூடாது. திருப்பலியின்போது கைப்பேசிகள் பயன்படுத்துவதை நிறுத்தவும். அப்படி அவசரமாக பேச வேண்டியிருந்தால் தயவு செய்து வெளியே செல்லவும், இதனால் மற்றவர்களால் செபிக்க இயலும். திருப்பலியின்போது மின்னியல் கருவிகளைப் பயன்படுத்த வேண்டாம். மருத்துவ தேவையைத் தவிர்த்து ஆலயத்தில் இனிப்புகளையோ, மெல்லும் கோந்தையோ உட்கொள்ளாதீர்கள். இது புனிதமான ஆலயம் என்ற உங்களின் உணர்வை இழக்காதீர்கள். பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் மேற்படி நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவதை உறுதிசெய்யுங்கள்.

**16. எரிக்கப்பட்ட உடலின் சாம்பல் பகுதிகள்:** எரிக்கப்பட்ட எல்லா எஞ்சிய உடல் பகுதிகளும் ஆற்றில், கடலில் கரைக்க, குடும்ப உறுப்பினர்களிடையே பிரித்துக்கொள்ளவோ, உங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளவோ, அவர்களின் எலும்புகளை ஆபரணங்களாக செய்துகொள்ளவோ **அனுமதிக்கப்படாது**. இது கத்தோலிக்க விசுவாசத்திற்கு இணக்கமற்ற எதிரான செயலாகும்; **கத்தோலிக்க நடைமுறையும் அல்ல.** உடல்பகுதிகள் இறந்தோர் சாம்பலை வைக்க சுவற்றில் உள்ள அமைவுகளில் (Columbarium) **வைக்கவேண்டும்,** அல்லது கல்லறையில் புதைக்க வேண்டும் (உங்கள் தோட்டத்தில் அல்ல). இது உடலின் உயிர்ப்பை விசுவாசிக்கும் நோக்கமாகும். அப்படி ஒரு வேளை விசுவாசத்திற்கு எதிரான செயல்கள் இருந்தால், அடக்க சடங்குகள் மறுக்கப்படும்.

**17. விசுவாசத்தைக் கைவிடுதல்:** பிற கிறிஸ்துவ சபைகளில் அல்லது பிற மதத்தில் சேருவதற்காக கத்தோலிக்க திருச்சபையை விட்டு விலகியவர்கள் உங்களின் செய்கையினால் கத்தோலிக்க உரிமைகளை இழக்கின்றீர்கள்.

**18. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி ஜனவரி 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- 221,489.38 அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- 241,357.51 (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும், வாரந்தோறும் அல்ல)

19/02/17 **திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,013.40 **காலை 9.00** - RM 1,488.20 **ஜெலாப்பாங்**– RM 127.60 **மொத்தம்**– RM 2,629.20
**2016** - RM 250.00 **2017** - RM 190.00 **மொத்தம்**– RM 440.00
நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்